முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1175

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.12.2022, சனிக்கிழமை

1. பார்போற்றும் ஞான வள்ளலே
   பரமானந்த சதாசிவ சற்குருவே
   பாரதனை தர்மலோகமாக்கி
   பாரர்க்கும் ஞானம் அருளவந்த
2. அருளவந்த ஞானியே அரங்கனே
   அப்பனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   பெருமைபட ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் மார்கழி மாதம் 02 ம் நாள் 17.12.2022, சனிக்கிழமை)
   புகலுவேன் அரங்கன் சக்தி உலகமறிய
3. உலகமெல்லாம் அரங்கன் தர்மம்
   ஓங்காரம் பாடி நிரம்பிவர
   உலகினில் எதிர்மறை நிகழ்வுகளெல்லாம்
   உருகுக்லைந்து அகன்று இனிதே ஞானவாழ்வாக
4. ஆகவே மக்களுக்கு மாற்றம் கண்டு
   அகிலமே ஞானிகள் வழிகாட்டலில்
   மிகைபட ஞானவான்கள் தலைமை பெருகி
   மண்ணுலகம் ஞான ஆட்சிப்பெறக்கூடும்
5. கூடாத எதிர்வினைகள் குவலயத்தை விட்டு
   கூறிடுவேன் அகன்றோடி சடுதி மாற்றம்
   நாடெங்கிலும் ஞானத்தலைமையாக ஞானவான்கள் கூடிய சபையுமாக மாறி
   மாறியே ஞானிகள் ஆட்சி இனிதே மண்ணுலகம் கண்டு சிறக்க நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—